**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – விடுதிகள் – தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள அரசுக் கட்டடங்களில் இயங்கும் ஆதிதிராவிடர் நல விடுதிகளில் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையிலுள்ள விடுதிகளை இடித்துவிட்டு ரூ.1449.60 இலட்சம் மதிப்பீட்டில் 9 புதிய விடுதிகள் கட்டுதல் – நிர்வாக அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந–2) துறை**

அரசாணை (நிலை) எண்: 20

நாள் : 25.02.2019
விளம்பி வருடம்
மாசி திங்கள் 13–ஆம் நாள்
திருவள்ளுவர் ஆண்டு 2050

படிக்கப்பட்டது:–

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித ந.க. எண். த3/17206/ 2018, நாள். 06.09.2018.

-----

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் ஆதிதிராவிடர் நல விடுதிகளில், 30 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவரும் விடுதிகள் மிகவும் பழுதடைந்து, மாணவ / மாணவியர் தங்கி பயில தகுதியற்று பயன்படுத்த முடியாத அபாய நிலையில் உள்ளதாலும், அவ்விடுதிகளை இடித்துவிட்டு புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலையில் இருப்பதாலும், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள 9 ஆதிதிராவிடர் நல விடுதிகளை இடித்துவிட்டு புதிய விடுதிக் கட்டடங்கள் கட்டுவதற்கு தாட்கோ மேலாண்மை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகளுடன் கூடிய மதிப்பீட்டு அறிக்கைகளை இணைத்தனுப்பி, நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. ஆதி திராவிடர் நல இயக்குநரின் மேற்காணும் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் அரசுக் கட்டடங்களில் இயங்கும் ஆதிதிராவிடர் நல விடுதிகளில் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையிலுள்ள விடுதிகளை இடித்துவிட்டு ரூ.14,49,60,000/– (ரூபாய் பதினான்கு கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மதிப்பீட்டில் 9 புதிய விடுதிகள் கட்டுவதற்கு, ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு நிர்வாக அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது:-

| வ.எண். | விடுதியின் பெயர் மற்றும் மாவட்டம் | ஒரு விடுதியில் தங்கிப் பயிலும் மாணாக்கர் எண்ணிக்கை | ஒதுக்கீடு செய்யப்படும் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, வல்லம், தஞ்சாவூர் மாவட்டம் | 50 | 127.12 |
| 2. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, எடையூர், திருவாரூர் மாவட்டம் | 50 | 127.12 |

(த.பி.பா.)

| | | | |
|---|---|---|---|
| 3. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, கோட்டூர், திருவாரூர் மாவட்டம் | 50 | 127.12 |
| 4. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, நன்னிலம், திருவாரூர் மாவட்டம் | 50 | 127.12 |
| 5. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, பேரளம், திருவாரூர் மாவட்டம் | 50 | 127.12 |
| 6. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, கொரடாச்சேரி, திருவாரூர் மாவட்டம் | 50 | 127.12 |
| 7. | ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி, திருக்குவளை, நாகப்பட்டினம் மாவட்டம் | 50 | 127.12 |
| 8. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, திருவாரூர், திருவாரூர் மாவட்டம் | 100 | 238.09 |
| 9. | ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி, மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம் | 200 | 321.67 |
| **மொத்தம்** | | | **1449.60** |

3. மேலே பத்தி 2-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணிக்கான செலவினங்கள் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :-

" 4225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர் , ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு 01 ஆதிதிராவிடர் நலன் 277 கல்வி மாநிலச் செலவினங்கள் JA ஆதி திராவிடர் மாணவரில்லங்கள் கட்டுதல் 16 பெரும்பணிகள் (த.தொ.கு. 4225 01 277 JA 1603) "

4. கட்டுமானப் பணிகளை குறித்த காலக்கெடுவுக்குள் கட்டிமுடிக்க கால அட்டவணை ஒன்றினை மேலாண்மை இயக்குநர், தாட்கோவுடன் கலந்தாலோசித்து தயார் செய்யும்படியும், அதன்படி தேவையான நிதியை அரசிடமிருந்து பெறுவதற்கு உரிய கருத்துருவை 2019-2020-ஆம் நிதியாண்டில் அனுப்பிவைக்குமாறும், ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இவ்வாணை நிதித் துறையின் அலுவல் சாரா குறிப்பு எண். 8942/ஆதி(ம)பந/ 2019, நாள். 25.02.2019-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஒட்டெம் டாய்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்:</u>

ஆதிதிராவிடர் நல இயக்குநர், சென்னை – 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை –600 018.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –600 006/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 008.
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர். திருவாரூர், நாகப்பட்டினம்
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், தஞ்சாவூர். திருவாரூர், நாகப்பட்டினம்
மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம்

(த.பி.பா.)

<u>**நகல்:**</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை –600 009.
மாண்புமிகு அமைச்சர், (ஆதி(ம)பந) அவர்களின்
முதுநிலை சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –600 009.
நிதி(ஆதி(ம)பந)துறை, சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை –600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(அநமு.1/ஆதிந.4/ ஆதிந.5 ) துறை, சென்னை –600 009.
இருப்புக்கோப்பு /உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்